பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

09 10 2025 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா-இங்கிலாந்து இடையேயான இருதரப்பு உறவு குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியும், இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer-ம் மும்பையில் இன்று பேச்சு நடத்த உள்ளனர்.
- மருந்துகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கு முன்பாக சோதனை செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநிலங்களின் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
- கைத்தறித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் மினி கைத்திறப் பூங்கா அமைக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. காந்தி கூறியுள்ளார்.
- தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் மக்கள் நலத்திட்டங்கள் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயனடைந்தனர் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
- உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer-ம் மும்பையில் இன்று பேச்சு நடத்த உள்ளனர்.

அப்போது வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்நுட்பம் மற்றும் புதுமைக் கண்டுபிடிப்புகள், பாதுகாப்பு, பருவநிலை மற்றும் எரிசக்தி, சுகாதாரம், கல்வி மற்றும் இருநாட்டு மக்களுக்கு இடையேயான உறவுகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆய்வு செய்ய உள்ளனர்.

இந்தியா-இங்கிலாந்து இடையேயான விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தின் வாய்ப்புகள் குறித்து வர்த்தகம் மற்றும் தொழில்துறை தலைவர்களுடன் அவர்கள் உரையாட உள்ளனர்.

பிராந்திய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விவகாரம் குறித்தும் அவர்கள் கருத்துகளை பரிமாறிக்கொள்ள உள்ளனர்.

தொழில்துறை நிபுணர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் புதுமைக் கண்டுபிடிப்பாளர்களுடனும் விவாதிக்க உள்ளனர்.

அதைத் தொடர்ந்து பிற்பகலில் நடைபெறும் நிதி தொழில்நுட்ப மாநாட்டிலும் பிரதமர் திரு. நரேந்திர மோடியும், இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer-ம் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மருந்துகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கு முன்பாக சோதனை செய்யப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்து சுகாதார சேவைகளின் தலைமை இயக்குநரகம் எழுதியுள்ள கடிதத்தில், மருந்து உற்பத்தியாளர்கள் நம்பத்தகுந்த அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரிடமிருந்து மூலப் பொருட்களைப் பெற்று பயன்படுத்துவதையும், மருந்துகள் உரிய விற்பனைக்குரிய தகுதியை கொண்டிருப்பதையும் உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மருந்து விதிகளின்படி உரிமம் பெற்றுள்ளவர் மருந்து உற்பத்திக்கு தாம் பயன்படுத்தும் மூலப்பொருளின் ஒவ்வொரு பகுதியையும் அல்லது இறுதித் தயாரிப்பின் ஒவ்வொரு பகுதியையும் பரிசோதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான சோதனை விவரங்களின் பதிவுகளை மருந்து உற்பத்தி உரிமம் பெற்றவர்கள் பராமரிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் மக்களுக்கான பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற அவர், செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 70 சதவீதம் அளவிற்கு உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள 102 முகாம்களை நடத்துவது தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துமாறு அதிகாரிகளை திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

கைத்திறித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் மினி கைத்திறப் பூங்கா அமைக்கப்பட்டு வருவதாக மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே சிறுமுகை பழத்தோட்டம் என்ற இடத்தில் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கைத்திற மினி பூங்கா திறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

தமிழகத்தில் பத்துக்கும் மேற்பட்ட பகுதிகளில் கைத்தறிப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளதாகவும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட வேண்டும், அவர்களின் ஊதியம் உயர வேண்டும் என்ற நோக்கில் மினி கைத்தறிப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளதாக திரு. காந்தி கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டிலேயே தமிழகத்தில்தான் லட்சக்கணக்கான பட்டதாரிகள் உள்ளனர் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 949 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

60 கிராமங்களில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஒரத்தநாடு கலைக் கல்லூரியில் கடந்த 4 ஆண்டுகளில் ஆயிரத்து 180 முதல் தலைமுறைப் பட்டதாரிகள் பட்டம் பெற்றுள்ளதாக திரு. கோவி. செழியன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் மக்கள் நலத்திட்டங்கள் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு பொதுமக்கள் பயனடைந்தனர் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட கரட்டுப்பாளையம் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தற்போதைய திமுக ஆட்சியில் வரி உயர்வு, சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு, போதைப்பொருள் புழக்கம் போன்ற பிரச்சினைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

அதைத் தொடர்ந்து குமாரபாளையம் தொகுதிக்குட்பட்ட சாணார்பாளையத்தில் பேசிய திரு. எடப்பாடி பழனிசாமி, அஇஅதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மக்கள் நலத்திட்டங்கள் முழு உத்வேகத்துடன் செயல்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் முதல் முறையாக தோடர் பழங்குடியினர் வளர்த்து வரும் எருமைப் பாலைக் கொண்டு பல்வேறு வகையான பால் பொருட்களைத் தயாரிப்பதற்கான எருமைப்பால் மதிப்புக் கூட்டு மையத்தை பகல்கோடுமந்து என்ற இடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இதைத் திறந்து வைத்துப் பேசிய மாவட்ட ஆட்சியர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, தோடர் பழங்குடியினர் உற்பத்தி செய்யும் இந்த பால் பொருட்கள் பெரிய கடைகளில் விற்பனை செய்யப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

<<<<>>>>

ஊடகவியலார்கள் சமூகப் பொருளாதார வளர்ச்சி தொடர்பான செய்திகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று பத்திரிகை தகவல் அலுவலக தென்மண்டல இயக்குநர் திரு. வி. பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

காரைக்குடி மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கத்தில் உரையாற்றிய அவர், தற்கால டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்ப தேவையான திறன்களை வளர்த்துக்கொள்வது அவசியம் என்று கூறினார்.

மேலும் போலிச் செய்திகளை தவிர்ப்பது இன்றியமையாத பணி என்றும் திரு. பழனிசாமி குறிப்பிட்டார்.

<<<<>>>>

மியான்மரில் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது ராணுவம் வீசிய குண்டுகளால் 24 பேர் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

யுக்ரைன் ராணுவம் Belgorod பிராந்திய எல்லையில் நடத்திய தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர் என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலம் நாராயண்பூர் மாவட்டத்தில் மாவோயிஸ்ட்கள் 16 பேர் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

<<<<>>>>

புத்தொழில் நிறுவனங்களில் இந்தியா உலகின் 3வது மிகப்பெரிய நாடாக உருவெடுத்துள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் கூறியுள்ளார்.

<<<<>>>>

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் மேலாண்மைத் துறை சார்பில் கோட்டகுப்பம் முதல் ஆரோவில் வரை போக்குவரத்து பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே தனியார் பொறியியல் கல்லூரி வளாகத்தில் தேனீக்கள் கொட்டியதில் காயமடைந்த 15க்கும் மேற்பட்ட மாணவர்கள் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் பாச்சல் பகுதியில் இஸ்ரோ சார்பில் நடைபெற்ற உலக விண்வெளி வாரம் ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

தேனி-ஆண்டிப்பட்டி ரயில் நிலையங்களுக்கு இடையே கட்டப்பட்டு வரும் ரயில் மேம்பாலப் பணிகளை ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

தேசிய தன்னார்வ ரத்த தான தினம் தொடர்பான கருத்தரங்கை மயிலாடுதுறை ஆட்சியர் திரு. H.S. ஸ்ரீகாந்த் தொடங்கி வைத்து ரத்த தானம் செய்தோருக்கு சான்றிதழ் வழங்கினார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் வெள்ளையூர் கிராமத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை 3 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஃபிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - அமெரிக்காவின் Reese Stalder இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-1, 3-6, 10-6 என்ற செட் கணக்கில் குரோஷியாவின் Matej Dodic - ஆஸ்திரியாவின் Filip Misolic இணையை வென்றது.

<<<<>>>>